இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

பட்டப்பின் கல்வி டிப்ளோமா

இறுதிப் பரீட்சை 2004/2005

ESP 1107 – கலைத்திட்ட கொள்கையும் நடைமுறையும்

காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 23.07.2006 நேரம்: மு.ப 9.30 - பி.ப 12.30

பகுதி இல் I உள்ள எல்லா வினாக்களுக்கும் பகுதி II இல் இருந்து எவையேனும் மூன்று வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

1. ‘கலைத்திட்டம்’ என்பதற்கு உங்கள் வரைவிலக்கணத்தைத் தருக

2 ‘மறைக் கலைத்திட்டம்’ என்பதனால் நீங்கள் கருதுவது என்ன?

3. ‘கலைத்திட்டம் ஒன்றின் நோக்கங்கள், உள்ளடக்கம் மற்றும் கற்றல் என்பன ஒன்றிற்கொன்று நெருக்கமாகத் தொடர்புபட்டவையாகும்’ - இக் கூற்றினை விரிவுபடுத்துக.

4. கலைத்திட்டம் ஒன்றின் குறுக்கிடை ஒன்றிணைப்பினையும் நெடுக்கிடை ஒன்றிணைப்பினையும் வேறுபடுத்துக.

5. CIPP கலைத்திட்ட மதிப்பீட்டு மாதிரியை விளக்குக.

6. இலங்கையில் 1972இல் அமுல்படுத்தப்பட்ட இடைநிலைப் பாடசாலைக் கலைத்திட்டத்தின் மூன்று குறிப்பிடத்தக்க அம்சங்களைக் குறிப்பிடுக.

7. கலைத்திட்ட ஒழுங்கமைப்பில் தேவைக்கொள்கையின் முக்கியத்துவத்தினைச் சுருக்கமாக ஆராய்க.

8. ‘மையக்கலைத்திட்டம்’ என்றால் என்ன என்பதைப் பொருத்தமான உதாரணம் தந்து விளக்குக.

(5 x 8 = 40 புள்ளிகள்)

## பகுதி II

9. (i) டைலரின் கலைத்திட்ட அபிவிருத்தி மாதிரியினை ஒரு வரிவடிவத்தின் (diagram) உதவியுடன் விளக்குக. இம்மாதிரியின் பிரதான அம்சங்களை விளக்குக.

(8 புள்ளிகள்)

(ii) டைலரின் மாதிரியில் உள்ள இரண்டு பிரதான குறைபாடுகளைக் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

(iii) வீலரின் கலைத்திட்ட அபிவிருத்தி மாதிரியானது இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்ய எவ்வளவு தூரத்திற்கு முயற்சித்துள்ளதென்பதை விளக்குக.

(8 புள்ளிகள்)

10. (i) 'சமூக மாற்றம்' என்பதனால் நீங்கள் கருதுவது என்ன?

(6 புள்ளிகள்)

(ii) சமூகமாற்றங்களுக்கமைய பாடசாலைக் கலைத்திட்டத்தினை ஏன் அவசியம் மாற்றவேண்டும் என்பதனைப் பொருத்தமான உதாரணங்கள் தந்து விளக்குக.

(8 புள்ளிகள்)

(iii) சமூகத்தின் தேவைகளை நிறைவு செய்வதற்காகக் கடந்த இரண்டு தசாப்தங்களில் இலங்கையில் பாடசாலை மட்டத்தில் கொண்டு வரப்பட்ட கலைத்திட்ட மாற்றங்களை ஆராய்க.

(6 புள்ளிகள்)

11. பாடசாலைக் கலைத்திட்டம் ஒன்றினுக்கு உள்ளடக்கத்தினையும் கற்றல் அனுபவங்களையும் தெரிவுசெய்யும் போது கருத்திற் கொள்ளப்பட வேண்டிய காரணிகளை விளக்குக.

(20 புள்ளிகள்)

12. (i) இலங்கையின் தற்போதைய ஆரம்பப்பாடசாலைக் கலைத்திட்டம் அல்லது இடைநிலைப் பாடசாலைக் கலைத்திட்டம் பற்றி சுருக்கமாக விபரிக்க.

(6 புள்ளிகள்)

(ii) ஆரம்பப் பாடசாலைக் கலைத்திட்டத்தினை அல்லது இடைநிலைப் பாடசாலைக் கலைத்திட்டத்தினை அமுல்படுத்துவதில் உங்கள் பாடசாலை எதிர்கொள்ளும் இடர்ப்பாடுகளை ஆராய்க.

(8 புள்ளிகள்)

(iii) இவ்விடர்ப்பாடுகளை நீக்குவதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

(6 புள்ளிகள்)

13. பாடசாலைக் கலைத்திட்டம் ஒன்றின் வெற்றிகரமான அமுலாக்கலில் பின்வருவோரின் வகிபங்கினைப் பரிசீலிக்க.

(i) அதிபர் (ii) ஆசிரியர்கள் (iii) சேவைக்கால ஆலோசகர்கள்(ISAs)

(20 புள்ளிகள்)

14. பின்வரும் தலைப்புகளில் எவையேனும் மூன்று பற்றிச் சுருக்கக் குறிப்புகள் எழுதுக.

(i) குறிக்கோள்களை அறிவு, திறன்கள், மனப்பாங்குகள் என வகைப்படுத்துவதன் முக்கியத்துவம்.

(ii) கலைத்திட்ட திட்டமிடலிலும், அபிவிருத்தியிலும் தத்துவத்தின் செல்வாக்கு

(iii) கலைத்திட்ட மதிப்பீட்டின் முக்கியத்துவம்

(iv) பாடசாலை மட்டக்கணிப்பீடு - அதன் அனுகூலங்கள்

(20 புள்ளிகள்)

(பதிப்புரிமை பெற்றது)